*July to December 2019*

SEASL

# நீல நீந்தும் நண்டு

## சிற்றறிக்கை இல. 12

*சிறிலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி (SLBSC) மேம்படுத்தல் திட்டத்தினை (FIP) தேசிய மீன்வளத் துறை நண்டுக் கவுன்கல் நிறுவனம் 2013 ம் ஆண்டு காத்திகை மாதம் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் அவர்களால் உத்தியோக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது சிறிலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி (SLBSC) மேம்படுத்தல் திட்டமானது உற்பத்தியாளர்கள் (மீனவர்கள்) கடலுனவு நிறுவனங்கள் ஒழுங்காக்குனர்கள் (அரசாங்க நிறுவனங்கள்) ஆகியோரை ஒன்றினைத்து பாக்கு நீரிணையிலும் மன்னார் குடாவிலும் நீல நீந்தும் நண்டு (BSC) மீன்பிடி தொடர்பான உயிரியல் ரீதியான உயிர் வாழ்வுச் சூழல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் வேண்டும் தற்போதும் எதிர்காலத்திதும் இலங்கையில் நீல நீந்தும் நண்டு உற்பத்திகளுக்கு இந்த மீன்பிடிமுன்னேற்ற திட்டம் பொறுப்பானதாக உள்ளது தெற்கு ஆசியாவில் இலங்கை மீன்பிடிக்கு மட்டும் மானடேரி பே அக்ரிமாரியம் கடல்வாச் திட்டம் நுகர்வோருக்கு நல்ல தெரிவு* ***GOOD ALTERNATIVE*** *என்ற சான்றிதழை வழங்கியுள்ளது*

### நீல நீச்சல் நண்டின் இருப்பின் உயிரியல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல்



**இருப்பின் நிலை:** 2018 இல் நண்டுத்தொழிலாளிகளும் ஏற்றுமதி நிறுவனங்களும் பருவமடையாத சிறிய நண்டுகளை (< 99 g / < 119 mm) ஏற்றுமதி நிறுவனங்கள் கொள்வனவு செய்வது தொடர்பில் கவனத்தில் எடுத்தார்கள் அதன்படி மீனவர் கருத்துப்படி நண்டுத்தொழிலாளர்கள் பருவமடையாத சிறிய நண்டுகளை இலக்கு வைப்பதில்லை பருவமடையாத சிறிய நண்டுகள் வலையிலும் (3½" / 88.9 mm) சிறிய கண் வலையிலும்இழுவை வலையிலும் பிடிபடுகின்றன. ஆத்துடன் இறாலுக்கு பயன்படுத்தப்படும் பட்டி வலையிலும்தற்செயலாகபிடிக்கப்படுகின்றன. 2019 இல் மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு தகவல் சேகரிப்பின் கனிப்புகள் இந்த பருவமடையாத நண்டுகள் கொள்வனவு சம்பந்தமான மீனவர் கவனத்திற்கு ஆதாரமாக உள்ளது. பாக்கு நீரினை மீன்பிடியில் 20% மும் கிளிநொச்சி மாவட்டத்தில் 38% மும் 99 கிராமுக்கு குறைந்த (Grade IV – Very Small) நிறையுடைய நண்டுகளும் அளக்கப்பட்டன. மன்னார் வளைகுடா நீரினை மீன்பிடியில் 17% மும் 99 கிராமுக்கு குறைந்த (Grade IV – Very Small) நிறையுடைய நண்டுகளும் அளக்கப்பட்டன புத்தளம் மாவட்டத்தில் அதிகூடுதலாக 15% மும் 99 கிராமுக்கு குறைந்த (Grade IV – Very Small) நிறையுடையபருவமடையாத சிறிய நண்டுகளும் அளக்கப்பட்டன.

| | Av. Size | Av. Weight | Immature | <99g |
|---|---|---|---|---|
| **பாக்கு நீரினை** | 132 mm | 156 g | 7% | 20% |
| *யாழ்ப்பாணம்* | 140 mm | 185 g | 6% | 13% |
| *மன்னார்* | 132 mm | 156 g | 4% | 17% |
| *கிளிநொச்சி* | 120 mm | 115 g | 20% | 38% |

| | Av. Size | Av. Weight | Immature | <99g |
|---|---|---|---|---|
| **மன்னார் வளைகுடா** | 140 mm | 191 g | 7% | 17% |
| *மன்னார்* | 139 mm | 173 g | 0% | 4% |
| *புத்தளம்* | 141 mm | 191 g | 9% | 15% |


2019 தொகை மதிப்பீட்டு முடிவின்படி பாக்கு நீரினை மன்னார்வளைகுடாமீன்பிடிகளின் உற்பத்திதிறன் (TRP = 30% Spawning Potential) 30% மேலாக உள்ளதால் இவை நீடித்து நிலைக்க கூடிய மீன்பிடியாக உள்ளது. ஆனால் தொடர்ந்து ஏற்றுமதிக்கொம்பனிகள் தொடர்ந்து பருவமடையாத சிறிய நண்டுகளைக் கொள்வனவு செய்தால்தொகை மதிப்பீட்டு முடிவினை பாதிக்கும் இதனால் மீனவர்களும் ஏற்றுமதிநிறுவனங்களும் பாதிப்பு அடைய நேரிடும்

| BSC மீன்பிடி | TRP | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| **பாக்கு நீரினை** | 30% | 32% | 44% | 47% | 45% | 42% |
| **மன்னார் வளைகுடா** | 30% | 31% | 46% | 41% | 37% | 57% |

*மீன்பிடித் தளத்தினுடைய வாழ்வுச் சூழலியல் மேம்படுத்தல்களுக்கு **TSF, NFI** நிதி வழங்கி இருக்கின்றன*

## மீன்பிடியின் வாழ்வுச் சூழலியல் தகுநிலையை மேம்படுத்துதல்

ஊவா வெல்லச பல்கலைக்கழகம் மற்றும் சமுத்திர பல்கலைகழகம் ஆகியவற்றின் பல பட்டதாரி மாணவர்கள், 2015 ம்ஆண்டில் இருந்து 4½" (>114.3 mm)வலையளவுக்கு மேற்பட்ட நூல்.பிளாஸ்டிக் அடித்தள வலையை பாவித்து நண்டுத்தொழில் செய்யும் பாக்குநீரினை உள்ள 8 துறைகளிலும் மன்னார்வளைகுடாவில் 6 துறைகளிலும் கடந்த ஐந்து வருடங்கள் 18 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாணவர்களால் பாக்குநீரினையில்777 மீன்பிடிகளும் மன்னார் வளைகுடாவில் 857 மீன்பிடிகளும் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டன பாக்கு நீரினையில் 9,803.67 kg / 9.80 tons நிறுக்கப்பட்டது அதில். 64.3% நீல நீச்சல் நண்டுகளும் 35.7%வேறு மீனினங்களும் ஆகும் அதில்



19.1% மினினஙகள் பிடிக்கப்படுகின்றன ஏனைய 16.6% மீனவர்களால் வீசப்படுகின்றது. மொத்தமாக பாக்குநீரினையில் 84.3% இலக்கு அல்லாத மீன்பிடிஇனங்கள் மீனவர்களால் பிடிக்கப்படுகின்றன மன்னார் வளைகுடாவில் 17,843.29 kg / 17.84 tons நிறுக்கப்பட்டது அதில். 43.4% நீல நீச்சல் நண்டுகளும் 55% வேறு மீனினங்களும் ஆகும் அதில் 42.2% மினினஙகள் பிடிக்கப்படுகின்றன ஏனைய 11.5% மீனவர்களால் வீசப்படுகின்றது. மோத்தமாக பாக்குநீரினையில் 88.5%இலக்கு அல்லாத மீன்பிடி இனங்கள் மீனவர்களால் பிடிக்கப்படுகின்றன இலங்கை கடலும் அதன் சுற்றுச்சூழல் அமைப்பும் பலவகை இனங்கள் பெருக்கத்திற்கான இடமாக உலக ரீதியில் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடலில் 3500க்கு மேற்பட்ட இனங்கள் உள்ளன. பாக்கு நீரினையில் 168 இனங்களும் மன்னார் வளைகுடாவில் 152 இனங்களும் நண்டுத் தொழிலாளர்களால் இலக்கு அல்லாத மீனினங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன மன்னார் வளைகுடாவில் மூன்று கொக்கி மூக்குள்ள பாம்புகள் நண்டு வலையில் அகப்பட்டது (புத்தள மாவட்டம்) இந்த இரண்டு மீன்பிடிகளிலும் finfish (51%). பின்பிஸ் மொலஸ்கா Molluscs (17% - 23%) கிரஸ்சீன்ஸ crustaceans (14%-18%) எக்கைனோரேர்ார ஏனையவை(8%- 11%)ஆகும்

### இலக்கு இல்லாத இனங்களின் சூழழியல் தாக்கங்கள் :

பாக்கு விரிகுடா மற்றும் மன்னார் வளை குடாவிலான NTS மீது BSC மீன்பிடி ஏற்படுத்தியிருக்கும் உயிரின வாழ்வுச் சூழல் ரீதியான தாக்கங்கள் The Marine Stewardship Council (MSC) இனுடைய தரவு மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். உயிரினங்களுடைய இடர் வரவு அடிப்படையிலான என்புச் சட்ட அமைப்பில் உற்பத்தி திறன் / எளிதிற் பாதிக்கப்படும் தன்மை பகுப்பாய்வை பயன்படுத்தி மதிப்பீடு செய்யப் பட்டது. அருகிப் போகின்ற அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருக்கிற அல்லது பாதுகாக்கப்பட்டிருக்கிற உயிரினங்கள் இரண்டும், வாய்ப்பெல்லைக்கு அப்பால் பட்ட (OoS) ஒன்றும் இந்த இரு மீன்பிடித் தளங்களில் அவதானிக்கப் பட்டன. MSC இனுடைய உற்பத்தி திறன் எளிதில் பாதிகப்படும் தன்மை பகுப்பாய்வின் படி பாக்கு விரிகுடாவிலே உள்ள NTS கள் மீது BSC மீன்பிடியின் உயிரின் வாழ்வுச் சூழல் ரீதியான தாக்கம் ஒரு குறைந்த மட்ட பேணுகைக்குரிய விடயமாகவே இருக்கிறது. மன்னார் வளைகுடாவில் உள்ள வேளுகள் மீது BSC மீன்பிடியின் உயிரின் வாழ்வுச் சூழல் ரீதியான தாக்கம் நடுத்தர மட்ட பேணுகைக்குரிய விடயமாகவே இருக்கிறது

| BSC Fishery | No. | Category | PSA Score | Conservation Concern |
|---|---|---|---|---|
| **Palk Bay** | | | | |
| *Hedgehog seahorse* | 01 | ETP | 93 | Low |
| *Pale-edged stingray* | 1,305 | 2⁰ Main | 88 | Low |
| *Blue-spotted stingray* | 465 | 2⁰ Main | 82 | Low |
| *Spider conch* | 1,747 | 2⁰ Main | 82 | Low |
| **Gulf of Mannar** | | | | |
| *Hedgehog seahorse* | 01 | ETP | 93 | Low |
| *Hook-nosed sea snake* | 03 | OoS | 90 | Low |
| *Pale-edged stingray* | 4,452 | 2⁰ Main | 88 | Low |
| *Blue-spotted stingray* | 1,564 | 2⁰ Main | 82 | Low |
| *Spiral melongena* | 22,332 | 2⁰ Main | 73 | Medium |
| *Great hammerhead shark* | 02 | ETP | 70 | Medium |

**கடல்வாழ்விடங்களில் சூழழியல் பாதிப்பு:** 2017 ம் ஆண்டுக்கும் 2018ம் ஆண்டுக்கும் இடையில் இரண்டு மீன்பிடி பிரிவுகளிலும்உள்ள 78 மீன்பிடி துறைகளில் புவியியல் தகவல் அமைப்பு (GIS) மூலம் நண்டு பிடிபடும் இடங்கள் மற்றும். முக்கிய கடல் தாவர உயிரின வாழ்விட சம்பந்தமான வரைபட அளவீடுகள் செய்யப்பட்டன இந்த முடிவகளின் படி நண்டுத் தொழிலுக்கு பாவிக்கப்படும் அடித்தள வலைகளால் கடல்வாழ் உயிரினங்களான கடல்புற்கள் முருகைக்கற்பாறைகள் மாங்கிறோஸ் என்பவற்றிக்கான பாதிப்பு குறைவாகவே உள்ளது தகவல்களுக்கு அறிக்கை 11 ஐ பார்வையிடவும்

*மீன்பிடித் தளத்தினுடைய வாழ்வுச் சூழலியல் மேம்படுத்தல்களுக்கு NFI நிதி உதவியையும் ஊவா வலச பல்கலைக்களகம் தொழில்நுட்ப உதவியையும் வழங்கி இருக்கின்றன*

## மீன்பிடி முகாமைவத்துவத்தை முன்னேற்றுதல்

**மீன்பிடி முகாமைத்துவ ஒழுங்குகள்:** யாழ்ப்பாண கிளிநொச்சி மன்னார் புத்தளம் மாவட்ட மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகளின் மீன்பிடி பிரதிநிகளுடன் நீலநீச்சல் நண்டு பிடித்தல் மற்றும் வேறு சிறிய மீன்பிடிகள்பற்றிய கலந்துரையாடல் 2019 ம் ஆண்டு மார்கழி மாதம் மாவட்ட கடற்தொழில் தினைக்களத்தில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் கடந்தகால வருங்கால நீல நீந்தும் நண்டு முன்னேற்ற திட்டம் சம்பந்தமான விடயங்கள் கலந்தோசிக்கப்பட்டன. அவை பின்வருமாறு









**2018/19 தொகை மதிப்பீட்டு முடிவுகள் பாக்கு நீரினை மன்னார் வளைகுடா:** *முகாமைத்துவம் மற்றும் மின்பிடி சட்டங்களை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல்*

**தமிழ்நாட்டு இழுவைப்படகுகளின் அத்துமீறிய இழுவைமடி வலைத்தொழில்:** *மீனவர்கள் கடற்தொழில் தினைக்களத்திடமும் கடற்படையிடமும் தடைசெய்யப்பட்ட தமிழ்நாட்டு இழுவைப்படகுத்தொழிலுக்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகொள் விடுத்தார்கள்*

**புத்தளம் கடல்நீரேரியில் நண்டு பிடிபாடுகள் குறைந்து வருகின்றன:** *மீனவர்கள் கடற்தொழில் தினைக்களத்திடம் தடைசெய்யப்பட்ட உள்ளூர் இழுவைப்படகுத்தொழில்மூலம் சிறிய நண்டு பிடித்தலுகு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகொள் விடுத்தார்கள்*

மீனவர்கள் கடற்தொழில் தினைக்களத்திடம் தடைசெய்யப்பட்ட யாழ்ப்பாண.மன்னார் மாவட்ட உள்ளூர் இழுவைப்படகுத்தொழில்மூலம் எமது கடல்வளம் அழிதலுக்குச் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகொள் விடுத்தார்கள்

**சிறிய நண்டுகள்பிடித்தலை குறைத்தல் (<100g crabs):** *100* கிராமுக்கு குறைந்த நண்டுகளை ஏற்றுமதி நிறுவனங்கள் கொள்வனவு செய்வதை நிறுத்த வேண்டும் மற்றும் பட்டிவலைத்தொழிலாளிகளுக்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும் என கூறினார்கள்

**திட்ட அமுலாக்கல் எல்லா மீன்பிடித்துறைகளிலும் விலையை முன்னேற்றல்:** மீனவர்களின் எதிர்பார்ப்பு பெரிய சிறிய நடுத்தர நண்டுகளின் விலைகள் துறைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன அதனை சீராக்க வேண்டும்.

**திட்ட அமுலாக்கல் இலக்கு அல்லாத மீன் இனங்கள் பிடிபடுதல்**
நண்டுத்தொழிலில் இலக்கு இல்லாத மீன்பிடி இனங்கள் பிடிபடுதல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது

**மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ பிரதேசம் மீன்படி பரிசோதகர் பிரிவுகளில் முகாமைத்துவ குழுவை பற்றிய கலந்துரையாடல்**
மாவட்ட மட்ட மீன்பிடி முகாமைத்துவ பிரதேசம் உருவாக்குதல் சம்பந்தமான திட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டு இத் திட்டமானது FIP.இனால் பணிப்பாள் நாயகத்திற்கு எடுத்து செல்லப்படவுள்ளது பங்குனி 2020


**நீல நீச்சல் நண்டு மீன்பிடி சட்டம் பற்றி கலந்துரையாடல்:**
நண்டுபிடித்தலுக்கான சட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டு இத் திட்டமானது FIP.இனால் பணிப்பாள் நாயகத்திற்கு எடுத்து செல்லப்படவுள்ளது பங்குனி 2020

**நீல நீச்சல் நண்டு உற்பத்திகள் ஏற்றுமதிக்கான அட்டவனை:**
நீல நீச்சல் நண்டு உற்பத்திகள் ஏற்றுமதிக்காக நடைமுறை சம்பந்தமான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பற்றய கலந்துரையாடப்பட்டு இத் திட்டமானது FIP.இனால் பணிப்பாள் நாயகத்திற்கு எடுத்து செல்லப்படவுள்ளது பங்குனி 2020

*மீன்பிடி முகாமைத்தவ முன்னேற்ற திட்டத்திற்கு Asia / Harbor Seafood through CM Blue Crab Private Limited NFI நிதி உதவியை வழங்கி இருக்கின்றன மாவட்ட கடற்றொழில் தினைக்களத்திடம் இருந்து முகாமைத்துவ உதவிகள் பெறப்பட்டன*

## சமூக பொருளாதார முன்னேற்றத்தின் பொறுப்பு

**பொருண்மிய ரீதியான ஒப்பரவு பண்பு** ஏப்ரல் 2017 க்கும் ஏப்ரல் 2019 இற்கும் இடையிலே, பாக்கு விரிகுடா மீன் பிடித்தளத்திலே BSC இற்கான சராசரி கடற்கரை விலையானது 110% க்கு அதிகமான அளவில் அதிகரித்துள்ளது. ஆகக் கூடிய விலை அதிகரிப்பானது சிறிய நண்டுகளுக்கு கிடைத்தது (170%). BSC – அல்லாத மீன்பிடியாளர்களை சிறிய, மிகச் சிறிய மற்றும் முதிர்ச்சி அடையாத நண்டுகளை (னடவ் 99கி) இலக்கு வைக்க ஊக்குவிக்கும் காரணிகளில் ஒன்றாக உற்பத்தியாளர் அவற்றுக்கு வழங்கும் உயர்ந்த விலைகள் இருப்பதாக டீளுஊ மீன் பிடியாளர்கள் கூறுகிறார்கள். மீனவர்கள் கூறுவதன் படி மிகச் சிறிய மற்றும் முதிர்ச்சி அடைந்த நண்டுகள் (னடவ் 99கி) சிறிய கண் வலைகளில் (31/2” / 88.9 மி.மீ) மற்றும் இழுவை வலைகளை பயன்படுத்தும் BSC – அல்லாத மீன்பிடியாளர்களால் இலக்கு வைக்கப்படுவதோடு அதே போலவே இறால்களை இலக்கு வைக்கும் பட்டி வலை மீனவர்களால் தற்செயலாகவும் பிடிக்கப் படுகின்றன. முதிர்ச்சி அடையாத நண்டுகளை அறுவடை செய்வதற்கான நிதி ரீதியான ஊக்குவிப்பை சந்தைகள் தொடர்ந்து வழங்கு மெனில், இந்த இரண்டு மீன் பிடித் தளங்களிலும் மேற்கொள்ளப்படும் வருடாந்த இருப்பு மதிப்பீட்டில் இதனுடைய உயிரியல் ரீதியான தாக்கத்தை அவதானிக்க கூடியதாக இருக்கும்




Seafoood Watch நிகழ்ச்சி திட்டமானது 2019 ஜனவரியிலே சிறிலங்காவினுடைய BSC மீன்பிடிக்கு ஒரு நல்ல மாற்றீடு/ மஞ்சள் மதிப்பீட்டை கொடுத்துள்ளது இந்த உயிரின் வாழ்வுச் சூழல் ரீதியான மதிப்பீடானது சிறிலங்கா மீன் பிடித்துறைக்கு முதல் முறையாக வழங்கப் பட்டுள்ளது. தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவிலேயே நல்ல மாற்றீடு / மஞ்சள் மதிப்பீடு வழங்கப்பட்ட ஒரே மீன் பிடித் தளங்களாக மேற்படி இரண்டு மீன் பிடித் தளங்களுமே இருக்கின்றன. பாக்கு விரிகுடாவிலே டீளுஊக்கான சராசரி கடற்கரை விலைகள் 2019 பெப்ரவரியில் (வலம் பார்க்கவும் ) உச்ச மட்டத்தை எட்டின. அதன் பின் விலைகள் வீழ்ச்சி அடையத் தொடங்கின. இந்த உயிரியல் வாழ்வுச் சூழல் ரீதியான பரிந்துரை அறிவிக்கப்பட்ட பின் மீனவர்கள் பிடிக்கும் மீன்களின் பெறுமதி 30% ஆல் வீழ்ச்சி அடைந்துள்ளது. சிறி லங்காவின் உற்பத்தியாளர்கள், உயிரின வாழ்வுச் சூழல் ரீதியான பரிந்துரை வழங்கப்பட்ட சிறிலங்காவின் டீளுஊ உற்பத்திகளுக்கு சிறப்பான விலைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அமெரிக்கா இறக்குமதியாளர்கள் கூறுவதன்படி, உயிரின வாழ்வுச் சூழல் ரீதியான பரிந்துரை பெற்ற உற்பத்திகளுக்கான நுகர்வோரின் கேள்வி வட அமெரிக்க சந்தைகளில் இல்லாமல் இருப்பதே இதற்கு காரணமாகும்.

**சமூக பொறுப்பு:** கிளிநொச்சி மாவட்ட மீனவ அங்கத்துவர்களுடன் இனைந்து பிளாஸ்ரிக் மீள் சுழற்சி திட்டம் ஒன்று மார்கழி 2019 ஆரம்பிக்கப்பட்டது இதன் முடிவு பங்குனி மாதம் 2020 விவரிக்கப்படும்

*சமூக மற்றும் பொருண்மிய சரி ஒப்பரவுகளை மேம்படுத்தலுக்கு ஐநாவின் NFI CC நண்டுப் பேரவை கூட்டாக நிதி வழங்கி இருக்கின்றன*

சிறிலங்கா கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தின் (SEASL) சார்பில் FIP ஆனது 2013 ம் ஆண்டிலிருந்து SLBSC மீன்பிடியை மேம்படுத்துவதற்கென தேசிய மீன்பிடி நிறுவக நண்டுப் பேரவையால் உதாரத்துவமாக வழங்கப்பட்ட நிதி ரீதியான ஆதரவுக்காக அதற்கு நன்றி கூறுகிறது. அத்துடன் இந்த நீல நீந்தும் நண்டு செய்தி இதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் உப – செயல் திட்டங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்கு கூட்டு நிதி யூட்டம் அளித்த காபர் சீ பூட்ஸ், தப்ரபேன் சீ பூட் பிறைவேட் லிமிட்டட் சி எம் வுலு கிரப் பிறைவேட் லிமிட்டட மற்றும் டிரற் சீ புட் ஆசியர் ஆகிய நிறுவனங்களுக்கும் FIP நன்றி கூறுகிறது.

SEASL

NFI CRAB COUNCIL
COMMITTED TO SUSTAINABILITY

CM BLUE CRAB PVT. LTD.

DIRECT SEAFOOD ASIA
HARBOR SEAFOOD

Uva Wellassa University

நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கையின் பன்னிரண்டு தொகுதிகளையும் தமிழ் சிங்களம் ஆங்கில மொழிகளில் கிடைக்கக் கூடியதாக உள்ளன. ஒரு பிரதியை பெறுவதற்கு தயவு செய் steve@pelagikos.lk இற்கு e-தபால் அனுப்பவும